# COVID-19: NSW மாநிலத்தில் வீட்டில் நோய்த்தொற்று உள்ளவர்களுடன் தொடர்பில் இருந்திருப்பவர்கள் மற்றும் நோய்த்தொற்று உள்ள ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர்களுக்கான புதிய விதிமுறைகள்

நீங்கள் வீட்டில் நோய்த்தொற்று உள்ளவர்களுடன் தொடர்பில் இருந்திருப்பவர், அல்லது நோய்த்தொற்று உள்ள ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர் என்றால், மற்றும் உங்களுக்கு COVID-19 -இற்கான நோயறிகுறிகள் ஏதும் இல்லை என்றால், நீங்கள் உங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை இல்லை, ஆனால், NSW Health -இன் வழிகாட்டல்களை நீங்கள் அவசியம் பின்பற்றியாக வேண்டும்:

- மருத்துவமனைகள் மற்றும் முதியோர் பராமரிப்பு வசதிகள் போன்ற உயர்-நிலை ஆபத்து உள்ள இடங்களுக்குப் போகாதீர்கள்
- இயலுமான தருவாய்களில் வீட்டிலிருந்து படியுங்கள் அல்லது வேலை செய்யுங்கள். நீங்கள் வேலைக்கோ, பாடசாலைக்கோ செல்லவேண்டுமானால், உங்களுடைய முதலாளி அல்லது கல்வி நிலையத்தினரது அங்கிகாரம் உங்களுக்குத் தேவைப்படும்
- நீங்கள் 12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர் என்றால், முகக் கவசம் ஒன்றை அணியுங்கள். உங்களுடைய சொந்த வீட்டிற்குள் நீங்கள் முகக் கவசம் அணியவேண்டிய தேவை இல்லை
- பெரும் கூட்டங்களையும், உங்களுடன் சேர்ந்து வசிக்காதவர்கள் கலந்துகொள்ளும் நெரிசலான உட்புற ஒன்றுகூடல்களையும் தவிருங்கள். நீங்கள் அப்படிப்பட்ட கூட்டங்களுக்குச் செல்லவேண்டிய தேவை இருந்தால், நீங்கள் அங்கு செல்வதற்கு முன்பாக ‘துரித நோயறிவுச் சோதனை’ ஒன்றை மேற்கொள்ளுங்கள்

கடைசியாக உங்களுடைய குடும்பத்திலுள்ள ஒருவருக்கு COVID-19 இருப்பது உறுதிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 7 நாட்கள் வரை இந்த விதிமுறைகளைப் பின்பற்றுங்கள்.

உங்களுக்கு COVID-19 நோயறிகுறிகள் இருந்தால், அல்லது நோயறிகுறிகள் ஏற்பட்டால், நீங்கள் உங்களை சுய-தனிமைப்படுத்திக்கொண்டு நோயறிவுச் சோதனையை மேற்கொள்ளவேண்டியது கட்டாயமாகும். உங்களுடைய சோதனை முடிவு நேர்முகமானதாக இருந்தால், NSW Health-இன் அறிவுரைகளைப் பின்பற்றுங்கள்.

உங்களுடைய சோதனை முடிவு எதிர்முகமானதாக இருந்தால், உங்களுக்கு நோயறிகுறிகள் எதுவும் இல்லாத வரைக்கும் வீட்டிலேயே இருங்கள்.

**மேலதிகத் தகவல்களுக்கு www.nsw.gov.au/covid-19/management/household-contacts எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.**


© NSW Health April 2022.